இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 03-07-2024

# அரசியல் வெற்றியும் கொள்கை வெற்றியும்

**“எங்களது இலக்கு மிகப்பெரியது. எங்களது கொள்கை மிகமிகப் பெரியது. எனவே, எங்களது பயணமும் மிகமிக நீண்டது. நூற்றாண்டு காலத் திராவிட இயக்கத்தின் கனவுகளை நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் எங்களுக்கு உள்ளது. பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சிந்தனைகளை பேரறிஞர் அண்ணாவில் பாணியில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் செயல்வேகத்தோடு கொண்டு செலுத்தி வருகிறேன். எங்களது இலக்கில் நாங்கள் வெல்வோம். நாங்கள் வென்று கொண்டே இருப்போம். நாங்கள் வென்று கொண்டே இருப்போம்”** என்ற மாபெரும் கொள்கைப் பிரகடனத்தை ‘திராவிட மாடல்’ ஆட்சியின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைநிமிர்ந்து முழங்கி இருக்கிறார்கள்.

‘இது ஒரு கட்சியின் ஆட்சியல்ல, ஒரு இனத்தின் ஆட்சி, ஒரு கொள்கையின் ஆட்சி’ என்று பதவியேற்ற போதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே அடிப்படையில்தான் அனைத்துத் திட்டங்களையும் தீட்டி வருகிறார்கள்.

**“நான் ஆட்சிப் பொறுப்பேற்ற காலம் முதல் ஒவ்வொரு நாளும் - ஒவ்வொரு மணிநேரமும் - நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வந்துள்ளேன் என்பதை தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்ததன் அடையாளம்தான் 100 விழுக்காடு வெற்றி”** என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றியை நாங்கள் பெறுவோம் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை என்றும் உறுதிபட முதலமைச்சர் சொன்னார்.

**“நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி பெற்ற வாக்குகளை சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக ஆய்வு செய்தால் தி.மு.க. கூட்டணி 221 தொகுதிகளைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது”** என்பதையும் பெருமையுடன் சொன்னார் முதலமைச்சர்.

முதலமைச்சர் அவர்களின் உரையில் இரண்டு விதமான வெற்றிகள் பேசப்பட்டுள்ளது. ஒன்று அரசியல் வெற்றி, இன்னொன்று கொள்கை வெற்றி. அரசியல் வெற்றியை அவர் தலைமைப் பொறுப்புக்கு வந்தது முதல் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்று வருகிறார்கள். **‘நின்ற தேர்தல் முதல் வென்ற தலைவர் கலைஞர்’ என்றால் - ‘தலைவராக வந்த காலம் முதல் எதிர்கொண்ட அனைத்துத் தேர்தலிலும் வென்ற தலைவராக’ மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.** திட்டங்கள் - சாதனைகள் மூலமாக அரசியல் வெற்றியைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் பெற்று வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் சாதாரண அரசியல் கட்சியாக இருந்தால் - மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் சாதாரண தலைவராக இருந்திருந்தால் இந்த அரசியல் வெற்றியே போதுமானது என்று நிறைவடைந்து இருக்கலாம். நீதிக்கட்சியின் தொடர்ச்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பதால் - பெரியாரின், அண்ணாவின், கலைஞரின் கொள்கை வாரிசாக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இருப்பதால் கொள்கைப் பூர்வமான வெற்றியையே தனது முழுமையான வெற்றியாக நினைக்கிறார். அதற்கான பயணத்தையே அவர் நடத்தி வருகிறார்.

நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றியே போதும் என அவர் கொண்டாடவில்லை. அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதோடு தனது கடமை முடிந்து விடுவதாக அவர் நினைக்கவுமில்லை. **‘எங்களது இலக்கு மிகப்பெரியது. எங்களது கொள்கை மிகமிகப் பெரியது. எனவே, எங்களது பயணமும் மிகமிக நீண்டது.’** என்று சொல்வதன் மூலமாக நூற்றாண்டின் தொடர்ச்சியாக தன்னைக் கருதுகிறார் முதலமைச்சர் அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, ‘முதன் முறை ஆட்சிக்கு வந்துள்ளது தி.மு.க.’ என்று பத்திரிகைகள் எழுதியது. பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் திருத்தம் சொன்னார். **‘தி.மு.க. முதல் முறையாக ஆட்சிக்கு வரவில்லை. நீதிக்கட்சி ஆட்சியின் தொடர்ச்சிதான் நாங்கள்’** என்று வரலாற்றை பின் நோக்கிப் பார்த்துச் சொன்னார்கள். **‘தி.மு.க.வுக்கு நீதிக்கட்சி திராவிடர் கழகமும் தாய் தந்தை போன்றவர்கள்’** என்று முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணாவுக்கு முன்னதாக நீதிக் கட்சியின் செயலாளராக இருந்தவர்தான் கி.ஆ.பெ. அவர்கள். அந்த வரலாற்றுப் பின்புலத்தை உணர்ந்து செயல்படுபவராக மட்டுமல்ல, இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கு உணர்த்துபவராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்கள்.

ஏன் இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வெற்றி பெறுகிறது, ஏன் பா.ஜ.க. போன்ற பிளவுவாத சக்திகள் வெற்றி பெறத் திணறுகின்றன என்பதை அரசியல் ரீதியாக மட்டுமல்ல, வரலாற்றுப் பின்புலத்துடன் இப்போதுதான் அகில இந்தியக் கட்சிகள் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றன. பிற மாநிலக் கட்சிகள் உணரத் தொடங்கி இருக்கின்றன. இதன் அடையாளம் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகளில் தெரிந்தது. பா.ஜ.க.வை ஒரு அரசியல் கட்சியாக மட்டுமல்லாமல் கொள்கை எதிரியாக இந்த முறை தான் பிற கட்சிகள் விமர்சித்தது. இதுதான் பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழிக்கும் என்பதை அக்கட்சிகள் உணர்ந்தன. 2019 ஆம் ஆண்டு பா.ஜ.க.வை எதிர்த்து பேசியதையும் 2024 ஆம் ஆண்டு தேர்தலில் பேசியதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உணர முடியும். ஆர்.எஸ்.எஸ். அமைப்பை கொள்கை ரீதியாக கடுமையாக விமர்சித்து ராகுல் பேசியது இதற்கு மிக முக்கியமான எடுத்துக்காட்டு ஆகும்.

கொள்கையில் வெற்றி பெற்றால், அரசியல் வெற்றி தானாக வரும். கொள்கை வெற்றியின் மூலமாகப் பெறும் அரசியல் வெற்றி, நிலையானது. ஒரு கட்சி ஆட்சி முடிந்து, இன்னொரு கட்சி ஆட்சி வருவது மாற்றமல்ல. ஒரு தத்துவத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, இன்னொரு தத்துவம் ஆட்சிக்கு வருவதே சரியான மாற்றம் ஆகும். ஐம்பது ஆண்டு கால அரசியல் பயணத்தைத் தொய்வில்லாமல் தொடர்ந்து நடத்திய மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது இயக்கத்துக்கு மட்டுமல்ல அனைத்து இயக்கங்களுக்கும் சேர்த்து வழிகாட்டும் வழிமுறையாக இது அமைந்துள்ளது.

**‘எங்களது இலக்கு மிகப்பெரியது. எங்களது கொள்கை மிகமிகப் பெரியது. எனவே, எங்களது பயணமும் மிகமிக நீண்டது.’ என்ற கொள்கை வெற்றியையும் மாண்புமிகு முதலமைச்சர் அடைவார் என்பது உறுதி.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக 3 கோடி ரூபாய் மதிப்பிலான 5 புதிய அதிநவீன சொகுசு சுற்றுலா பேருந்துகளின் சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி. சமயமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில்

# ரூ.3 கோடியில் 5 அதிநவீன சொகுசு சுற்றுலாப் பேருந்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூலை 3 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக 3 கோடி ரூபாய் மதிப்பிலான 5 புதிய அதிநவீன சொகுசு சுற்றுலா பேருந்துகளின் சேவையினை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.**

ஏராளமான உள்ளூர் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலா தலங்கள், பழம்பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப் பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலா தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும், உள்நாட்டு சுற்றுலா பயணிகள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக வருகை தரும் வகையில் தமிழ்நாட்டின் நகரங்களை, நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களுடன் இணைக்கும் வகையிலான இரயில் சேவைகளும், தேசிய, மாநில நெடுஞ்சாலை இணைப்பு வசதிகளும் அதிக அளவில் கொண்ட மாநிலமாகவும், பேருந்து உள்ளிட்ட அனைத்து விதமான போக்குவரத்து வசதிகள் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கின்றது.

**1971 - கலைஞர் உருவாக்கிய வாரியம்!**

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டு உருவாக்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா பேருந்து சேவைகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், படகு குழாம்கள் போன்ற பல்வேறு சேவைகளை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு - ஒகேனக்கல், மைசூர் பெங்களூர், குற்றாலம், நவக்கிரக கோவில்கள் தொகுப்பு மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா பயண திட்டங்களும், சென்னை மாமல்லபுரம், காஞ்சிபுரம் மாமல்லபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி என ஒரு நாள் சுற்றுலா பயண திட்டங்களும். எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவா மந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும், 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா பயண திட்டங்களும், யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலா பயண திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர் சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், அதிநவீன சொகுசு பேருந்துகள், சாதாரண சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள் என மொத்தம் 15 சொகுசு பேருந்துகளை இயக்கி வருகிறது. இந்த சுற்றுலா பேருந்துகள் மூலமாக 7.5.2021 முதல் 31.5.2024 வரை 3,03,721 நபர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத்திட்டங்களின் கீழ் சுற்றுலா பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

**அனைத்து வசதிகளையும் கொண்ட பேருந்துகள்!**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில், சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக 3 கோடி ரூபாய் மதிப்பிலான 35 இருக்கைகள் கொண்ட 4 பேருந்துகள் மற்றும் 18 இருக்கைகள் கொண்ட 1 பேருந்து என 5 புதிய அதிநவீன சொகுசு சுற்றுலா பேருந்துகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த பேருந்துகளில் நீண்ட தூரம் மற்றும் நீண்ட நாட்கள் சுற்றுலா பயணம் மேற்கொள்ள குளிர் சாதன வசதி, மிதவை அமைப்பு (AIR SUSPENSION) வசதி, வாகனத்தின் இருப்பிடத்தை அறிய GPS கருவி, WIFI வசதி, ஒவ்வொரு இருக்கையிலும் போன் சார்ஜ் செய்யும் வசதி, 35 பயணிகளும் நீண்ட நாள் பயணத்திற்கான தங்கள் பொருட்களை தாராளமாக வைத்துக் கொள்ள மிகப்பெரிய அளவிலான பொருட்கள் வைப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ள

# 5 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 35 லட்சம் சிறப்பு ஊக்கத்தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூலை 3 -**

**பாரீஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 5 வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக 35 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.7.2024 அன்று தலைமைச் செயலகத்தில், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் பிரான்ஸ் நாட்டில் நடைபெறவுள்ள பாரீஸ் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்வாகியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த வீரர்கள் 5 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு ஊக்கத்தொகையாக தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 35 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள பாரீஸ் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள இதுவரை தமிழ்நாட்டைச் சார்ந்த 15 வீரர்கள், வீராங்கனைகள் தேர்வாகியுள்ளனர். இவர்களில், பிருத்விராஜ் தொண்டைமான் (துப்பாக்கி சுடுதல்), செல்வி. துளசிமதி முருகேசன் (பாரா பேட்மிண்டன்), திருமதி. மனிஷா ராமதாஸ் (பாரா பேட்மிண்டன்), செல்வி. நித்யா ஸ்ரீ சுமதி சிவன் (பாரா பேட்மிண்டன்) மற்றும் சிவரஞ்சன் சோலைமலை (பாரா பேட்மிண்டன்) ஆகியோருக்கு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு ஊக்கத்தொகையாக தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 35 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.